بسم الله الرحمن الرحيم

**Friday Sermon/ வெள்ளிக்கிழமை குத்துஃபா 28 April 2017**

**(01 Shabaan 1438 Hijira)**

# “THE PERFECT ATTRIBUTES OF GOD”

# “இறைவனின் பரிபூரணமான சிறப்புத் தன்மைகள்”






## HAZRAT KHALIFATHULLAH MUNIR AZIM (A)

## IN COMOROS





## & MAYOTTE

சலாமிற்கு பிறகு தஸ்ஹீதும் தஅவ்வசும் அல்ஃபாத்திஹாவும் ஓதிக்கொண்டு ஹஸ்ரத் கலீஃபத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை) அவர்கள் கீழ்வருமாறு தம் உரையினை ஆரம்பித்தார்.

## IMPORTANT WORKS IN THE COMOROS, MAYOTTE & REUNION ISLANDS

### கோமோரோஸிலும் மயோட்டாவிலும் ரியூனியன் தீவிலும் மேற்கொண்ட முக்கியமான வேலை

2017 ஏப்ரல் 10-ம் தேதி முதல் 23-ம் தேதி வரை "கோமரோஸிலும்" "மயோட்டியிலும்" "ரியூனியன் தீவிலும்" மேற்க்கொண்ட மிக முக்கியத்துவமான வேலைகளைக் குறித்து ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமை சார்ந்த என் தோழர்களில் பெரும்பாலோரும் அறிந்திருக்கமாட்டீர்கள். அல்லாஹ்வின் அருள்கொடைகளால் அல்லாஹ்வின் ஒரு அடியான் அவரை படைத்தவனின் கட்டளைகளுக்கு கட்டுபடுகின்றவனாக இருக்கின்றான். அவ்வழியில் சோதனைகளின் சூறாவளிகள் வந்தால் கூட அவ்வகை தடங்கல்களனைத்தும் அல்லாஹ் நீக்கிக் கொள்கின்றான். அது வாயிலாக அல்லாஹ்வே தான் வெற்றி வாயிலை சூடிக்கொள்கின்றான். **"லாஹாலிபா இல்லல்லாஹ்"** அனைத்து வெற்றியும் அல்லாஹ்வுக்கே உரியது.

அல்லாஹ்வின் கரங்களில் ஒரு துணைப்பொருள் மட்டுமாகயிருக்கின்றேன் நான். நான் கோமரோஸிலும் மயோட்டியிலும் ரியூனியன் தீவிலும் மேற்க்கொண்ட பயணத்தின் போது ஆயிரகணக்கான இழந்த ஆன்மாக்களை (மக்களை) ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின்பால் திருப்பிக் கொள்ள முடிந்தது. **"அல்ஹம்துலில்லாஹ்"** சில கிராமங்களும் அவர்களின் இமாமீம்களும் என்னிடத்தில் பை-அத்து செய்துக் கொண்டனர். அல்லாஹ்வின் அருள்களால் **"மொறோனி"**யில் தான் நமக்கு ஒரு ஜமா அத்து கிடைத்தது. அதில் அனைத்து உறுப்பினர்களும் அத்தோடு கொஞ்சம் பூமியும் கிடைத்தது. ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின் பெயரில் சட்டத்திற்குட்பட்ட முறையில் அதை மாற்றிக் கொள்ளவும் செய்தோம். வெகுவிரைவில் தான் இன்ஷா அல்லாஹ் அங்கு(பள்ளி வாசல்) கட்டுமான பணிகள் ஆரம்பித்து கொள்வோம்.

அல்லாஹ்வின் அருளால் பிற கிராமங்களிலும், அவனின் தனிப்பட்டமுறையிலான உதவியால் 2013-லும் 2015-லுமாக நமக்கு கிடைத்த பூமியில் இஸ்லாமிக் ஸ்கூல் கட்டிக் கொள்ள முடிந்தது. அதைப் போன்றே மஸ்ஜித்தும் கட்டிக் கொள்ள முடிந்தது. அதைப்போன்றே இராஜியத்தை சார்ந்த பிரபலமான நபர்களுடன் நமக்கு மிக முக்கியமான வேலைகளும் இருந்தது.

இறையருள் ஒரு பொழுதும் முடிவடைவதில்லை. அது சுயம் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றது. **"மயோட்டியாவில்"** நமக்கு ஒரு பெரிய ஜமா அத்து கிடைத்தது. அது **"கிரான்டே டெறயில்"** ஆகும். அதைப் போன்றே அங்கு மிக பெரிய ஒரு பள்ளி வாயிலும், மதரசாவும் உள்ளன. அதும் ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. அல்லாஹ்வின் அருள்கொடைகளால் மற்றொரு பகுதியில் நமக்கு முன்பு

கிடைத்த பூமியில் அல்லாஹ் வழங்கிய செல்வங்களைக் கொண்டு ஒரு பள்ளி வாயில் கட்டிக்கொள்ள முடிந்தது. **அல்ஹம்துலில்லாஹ்**. மயோட்டியாவை சார்ந்த ஜமா அத்து சஹீஹில் இஸ்லாமின் உறுப்பினர்களின் அன்பும் விருப்பவும் மூலமே அப்பள்ளி வாசியில் உயர்ந்து கொண்டது. முன்பு அங்குள்ள நம் ஜமா அத்து சகோதரர்களுக்கு வெள்ளிக்கிழமை தொழுகைக்கான வசதி எதுவும் இருந்ததில்லை. அவர்கள் அங்கு பெரிய பிரச்சனைகளை எதிர் கொண்டார்கள். சில வேளைகளில் அவர்கள் அவர்களின் சகோதரர்களின் மனைக்குள் ஒன்று கூடிக் கொண்டனர்.(ஆனால் அல்லாஹ்வின் அருள்களால் இப்போது அங்கு பள்ளிவாயில் கட்டிக்கொள்ள முடிந்தது) மயோட்டியாவிலும் கோமரோஸிலாவிலும் ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாம் அசாதாரணமான முன்னேற்றத்தின் பாதையிலாகும். அல்லாஹ்வின் மாபெரும் அருள்களால் குறிப்பாக **"தஆவா"** துறையில் மகத்தான முன்னேற்றமடைந்துள்ளது. அவர்கள் "தஆவா கல்விச்சாலையும், ஒரு "ஸ்டெடி கிளாசும் *(Dawa Academy and Study Circle)* அமைத்துக் கொண்டதோடு ஒவ்வொரு வாரத்திலும் அங்கு ஒன்று சேரவும் தீர்மானித்துள்ளனர். இன்ஷா அல்லாஹ். அதன் விளக்க விவரங்களை தற்பொழுது கூறிக்கொள்ளவில்லை. அதைக்குறித்து வெள்ளிக்கிழமை பேருரையில் கூறிக்கொள்ளாத விஷயங்களையாவும் வெகுவிரைவில் எங்கள் வெப்சைட் வழி வெளியிடுவோம்.

ரியூனியன் ஜமா அத்து அவர்களுக்கு மிக அதிகமளவிற்கு முன்னேற்றமடைய முடியவில்லை. அவர்கள் தொடராக ரிப்போர்டும் அளிப்பதில்லை. ஆனால் அல்லாஹ்வின் அருளால் அற்புதமான வழிகள் அங்கு திறந்திருக்கின்றது. புதிதாக ஏராளமான மக்கள் ஜமா அத்தில் நுழைந்திருக்கின்றனர். விரைவில் மிக நல்ல செயல்கள் *(Dawa works)* அவர்களிடமிருந்து எதிர் பார்க்கலாம். இன்ஷா அல்லாஹ்! ஜமா அத்து வேலைகளில் பின்னோக்கம் நிற்பவர்களை, அவர்கள் கையாளும் பொறுப்புகளிலிருந்து நீக்கி கொள்வதாகும். காரணம் அவர்களுக்கு பதிலாக அல்லாஹ் வேறு ஆள்களை வழங்கிக்கொள்வான். அவர்கள் திடமான உள்ளத்தோடு பாசமிக்க முறையில் செயல்பட்டுக் கொள்வார்கள். இன்ஷா அல்லாஹ். ஒரு "மதரசா" பகல் வேளைகளில் நம்முடைய குழந்தைகளுக்காக செயல்பட்டு வருகின்றது. ஒவ்வொருவாரத்திலும் தொடராக "தற்பியத் கூட்டங்களும்" *(Study-Circle)* நடைபெற்று வருகின்றது. அல்லாஹ்வின் அருள்களால் தொடர்ச்சியாக ரிப்போர்டும் கிடைக்கின்றது. அத்தோடு **"மௌபியா"** வில் ஒரு "தஆவா" கல்விச்சாலை ஆரம்பித்துள்ளது. ஜமா அத்தின் வேலைகளில் கவனமற்றவர்களாகயிருப்போர்களின் விஷயம் கவலைக்குரியதாகும். ஜமா அத்தின் பொறுப்புகளிலிருந்து அவர்களை நீக்கி கொண்ட காரணத்தால் அவர்களும் கவலைக்குரிய நிலையை அடைந்துள்ளனர்.

ரீயூனியன் தீவை பற்றிய அனைத்து விஷயங்களும் தற்போது கூறவில்லை. நம் வெப்சைட் வழியாக அவ்விஷயங்களையாவும் வெளிப்படுத்திக்

கொள்வோம். இன்ஷா அல்லாஹ். அல்லாஹ்வின் மீது வெற்றியடைகின்றவராக எவருமில்லை. இவ்விஷயங்களுக்கனைத்தும் வெற்றியை அளிப்பவன் அல்லாஹ்வே ஆவான். அல்ஹம்துலில்லாஹ்.

## “The Perfect Attributes of God”

### இறைவனின் பரிபூரணமான சிறப்புத் தன்மைகள்

இஸ்லாம் இறைவனை அறிமுகப்படுத்திக் கொள்வது, அவன் முழுமை பெற்றவன் என்ற நிலையிலாகும். அனைத்து விதமான ஆற்றல்களுடையவும் உரிமையாளர் என்ற நிலையில் இறைவனை அது எடுத்துரைக்கின்றது. திருக்குர்ஆனின் முதல் வசனத்தில் தான் அனைத்து புகழும் அல்லாஹ்வுக்கு மட்டுமுரியது என்றும் அனைத்து உலகையும் படைத்தவனும் அதை பாதுகாத்துக் கொள்கின்றவனும் என்றும் அது எடுத்துக் கூறுகின்றது.

அனைத்துப் பொருள்களையும் படைத்தவன் அல்லாஹ்வாகவேயிருக்கின்றான். அப்பொருட்கள்யாவும் அவனிடத்திலேயே அடைக்கலம் கொள்கின்றது. பல்வகைப்பட்ட பொருட்களில் நிலைநிற்கும் மகத்துவமும் அதன் அழகும் அவனுடைய படைப்பின் சிறப்பாகும். ஆகவே புகழுக்குரியவன் அவன் மட்டுமாகவே இருக்கின்றான். திருக்குர்ஆனில் இறைவனை **“ரஹ்மான்”** என கூறப்பட்டுள்ளது. அதாவது இறைவனின் தூய்மையான அருள்கள் வாயிலாகவும் அவன் பேருதவி வாயிலாகவும் அவன் மனிதனுக்கு தேவையான அனைத்துப் பொருள்களையும் இங்கு படைத்திருக்கின்றான். உதாரணமாக குழந்தைகளை பாதுகாத்து பராமரிப்பதற்காக தாய் தந்தையை படைத்திருக்கின்றான். அதைப் போன்றே ஒளி, வாயு, அக்னி, தண்ணீர், பல்வகையான உணவு பொருட்கள், மருந்து தன்மை பெற்ற தடிகள், இரும்பு, கல்கள் போன்றவைகள். மனிதனை படைத்துக் கொள்வதற்கு முன்னதாகவே மனிதனுக்கு தேவையான அனைத்தையும் இங்கு உருவாக்கி கொண்டான் என்பது ஒரு உண்மையாகும். இவையாவும் தோன்றிக் கொண்டது இறைவனின் சிறப்பு தன்மையாகிய **“ரஹ்மானியத்”** மூலமேயாகும். திருக்குர்ஆனில் இறைவனுக்கு **“ரஹீம்”** என பெயர் சூட்டப்பட்டிருக்கின்றது. அதாவது மனிதனின் எல்லா செயல்களுக்கும் அதன் தன்மைக்கும் மதிப்பிற்கும் ஏற்றவாறு பிரதிபலன் வழங்கி கொள்பவன். மனிதனின் முயற்ச்சிகளை அவன் வீணாக்குவதில்லை. அவர்களின் முயற்ச்சிக்கேற்ப அவன் பிரதிபலன் அளித்துக் கொள்கின்றான்.

அவன் இறுதி நாளின் அரசனாகயிருக்கின்றான். இயற்கை சட்டங்களை அவன் இயங்க வைப்பதோடு, இவ்வுலகில் வைத்து தான் பிரதிபலனும் தண்டனையும் வழங்கிக்கொள்கின்றான். ஒவ்வொரு செயல்களுக்கும் ஒரு எல்லையை அவன் தீர்மானித்திருக்கின்றான். அந்த எல்லையினை எட்டியவுடன்

தான் ஒவ்வொரு நல்ல செயல்களுக்கும் நல்ல பிரதிபலனும் தீய செயல்களுக்கு தீய பலனும் கிடைத்துவிடுகின்றது. இது அவனின் அரசதன்மைக்கு ஏற்றவாறு அளித்துக் கொள்வதாகும். மன்னித்துக் கொள்தல் என்பதும் தண்டித்துக் கொள்தல் என்பதும் அவனின் **“மாலிக்கியத்”** தில் உட்பட்டதாகும். அவனது மற்றொரு தன்மைப் பெயராகும் **“காதிர்”** என்பது. அதாவது நெருப்புக்கு அனலை வழங்கியிருப்பது போலவும், தண்ணீர் நெருப்பை அணைத்துக் கொள்வது போன்றும், எல்லாப்பொருட்களுக்கும் ஒரு இயற்கை சட்டமிருக்கின்றது. நெருப்பு சில நேரங்களில் வெப்பமும், வேறு சில நேரங்களில் குளிர்ச்சியும் வழங்கிக் கொண்டால், அதைப்போன்றே தண்ணீரும் பல விதத்தில் செயல்பட்டுக் கொண்டால் மக்கள் அஞ்சி அலைந்துவிடவும் செய்வார்கள். அவ்வாறேயானால் நம் தேவைக்கு அவையை பயன்படுத்திக் கொள்ள முடியாமலிருக்கும்.

- **He is “Sami”**

**அவன் அனைத்தையும் கேட்கின்றவன்**

- **He is “Hayy”**

**அவன் சுயம் வாழ்ந்திருப்பவனும் மற்றனைத்தையும் வாழவைப்போனுமாவான்**

- **He is “Khaliq”**

**“அவன் படைப்பாளியாவான்”**

- **He is “Qayyum”**

**அவன் மற்றனைத்தையும் நிலை நிற்கச் செய்பவன்**

- **He is “Samad”**

**அவன் உதவியும் ஆதரவுமின்றி மற்றெதுவும் நிலை நிற்க ஆகாது.**

- **He is “Ghafur”**

**அவன் தவறு குற்றங்களுக்கு மன்னிப்பு அளிப்பவன்**

- **He is Subbuh**

**அவன் அனைத்து பலவீனங்களுக்கும் அப்பார்பட்டவன்**

- **He is “Ahad”**

**அவனுக்கு நிகராக வேறெதுவும் இல்லை.**

* **He is “Wahid”**

**அவன் கட்டளைகளுக்கு ஏற்றவாறே அனைத்து பொருட்களுடையவும் உருவாக்கம். எல்லா படைப்பினங்களுடையவும் ஆதிகாரணமும் அவனாகின்றான்.**

திருக்குர்ஆனில் இறைவனின் மற்று ஏராளம் சிறப்பு தன்மைகளை எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றது. இறைவனைக் குறித்த ஒரு முழுமையான கருத்தை இஸ்லாம் நமக்கு வழங்கி கொள்கின்றது. அவனிடம் குடிகொள்கின்ற சிறப்பு தன்மைகள் ஒரு பகுதியில் நமக்கு அன்பை அளிப்பதோடு வேறொரு பகுதியில் பயமும் வழங்கிக் கொள்கின்றது. இவை இரண்டும் மனிதனுக்கும் இறைவனுக்கும் மத்தியில் ஒன்றுக் கொன்று ஆழமான பந்தத்திற்கு அவசியமானதாகும்.

ஒரு நிமிடம் நாம் சிந்தித்துக் கொண்டால் நமக்கு கண்டுக்கொள்ளலாம். முழுமையான ஒற்றுமையும் பரிபூரணமான கட்டுப்பாடும் ஒரு நிலையில் பார்த்தால் அது கருணை வழியாகவோ அல்லது பயம் மூலமாகவோ மட்டுமே சாத்தியமாகிக் கொள்வது என்று நமக்கு உணர்ந்து கொள்ளலாம். சந்தேகமில்லை கருணைதான் உன்னதமானதும் உயிருள்ளதுமான பந்தம். ஆனால் சமமான நிலையில், சில விஷயங்களுக்கு பயம் அவசியமாகயிருக்கின்றது. ஆகவே இஸ்லாம் இறைவனின் சிறப்புத்தன்மைகளை விளக்கி கொள்வது கருணைவாயிலாகவும் தண்டனை வாயிலாகவும் ஆகும். ஆனால் அது நம்மை நினைவூட்டுகின்றது. அதாவது திருக்குர் ஆனில் அல்லாஹ் கூறுகின்றான் **என்னுடைய கருணையானது எல்லாப் பொருள்களிலும் (விரிந்து பரந்து) சூழ்ந்து நிற்க்கின்றது**”(7:157)

மற்றொரு வார்த்தையைக் கொண்டு கூறினால் இறைவனின் சிறப்பு தன்மையான கோபமும் தண்டனையும் செயல்படுவது அவனுடைய கருணை எனும் சிறப்பு தன்மை மூலமாகவே ஆகும். ஏனெனில் கோபத்தினுடையவும் தண்டனையுடையவும் வாயிலாகவே அவர்களை சீர்திருத்தி கொள்வது. மாறாக அவனுக்கு வேதனையளிப்பதற்கல்ல. இங்கு ஒரு கேள்வி எழுப்புகின்றது. இறைவன் இருக்கின்றான் என்றால் ஏன் நமக்கு இறைவனை பார்க்க முடிவதில்லை? திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகின்றான்

**“பார்வைகள் அவனை அடைய முடியாது. ஆனால் அவனோ எல்லோருடைய பார்வைகளையும் அடைகின்றான். அவன் நுட்பமானவன் தெளிவான ஞானமுடையவன்”** (6:104)

மனித கண்களால் இறைவனை பார்வையிட முடியாத விதம் அவன் நுட்பமாகயிருக்கின்றான். ஆனால் அவன் அனைத்து விஷயங்களும் நன்கு அறிந்துக் கொள்கின்றான். நுட்பமான பொருட்கள் உதாரணமாக வாயு, மின்சாரம் இவற்றை மனித கண்களால் பார்க்க இயலாது. பின்னர் எவ்வகையில் இறைவனை அவர்களுக்கு பார்க்க முடிவது? முற்றிலும் நுட்பமாகயிருப்பவன்

யார்? முற்றிலும் நுட்பமானதை படைத்திருப்பது பொருட்களிலிருந்தல்ல. அதும் நுட்பமானதாகும். அவன்தான் எல்லா பொருட்களுடையவும் படைப்பாளன். ஆனால் அவனது வல்லமை வாயிலாகவும் அவனது சிறப்பு தன்மைகள் வாயிலாகவும் இறைவன் சுயமாகவே தன்னை வெளிப்படுத்திக் கொள்வான். அதாவது மனிதனின் சிந்தனை எனும் கண்களால் அவனை பார்வையிட முடிகின்றது.

முடிவாக இறை ஏகத்துவம் எனும் சிறப்பு தன்மையைக் குறித்து பேசிக்கொள்ள நான் விரும்புகின்றேன். இஸ்லாமில் இதற்கு என்ன பதவியிருக்கின்றது? சுருக்கமாக இறைவனின் ஏகத்துவத்தின் மீதான நம்பிக்கை என்பதால் அர்த்தமாக்கி கொள்வது மனிதனின் அன்பின் விருப்பம், ஆராதனை இறை மகத்துவம், வல்லமை எனும் ஒளி, மனித உள்ளத்தில் கூடி கொள்ளும் மாபெரும் வனப்பு, மனிதனின் தனிப்பட்ட முறையிலான விருப்பங்கள்யாவும் அவனுக்காக தியாகம் செய்து கொள்தல், எல்லா விதமான உலக விருப்பங்களையும் இறை திருப்திக்காக தவிர்த்துக் கொள்தல், மற்றனைத்து கட்டளைகளுக்கும் விருப்பங்களுக்கும் மோகங்களுக்கும் அப்பார்பட்ட தரத்தில் இறை திருப்திகாக செயல்பட்டுக் கொள்தல் (தியாகம் செய்தல்) என்பதே இறை ஏகத்துவத்தின் பொருள். இறை கட்டளைகளுக்கு மனிதன் முன்னுரிமை வழங்க வேண்டும் என்ற இலட்சியத்திற்காகவே இறைவன் நிலைகொள்கின்றான் என்பதை உணர்ந்துக் கொள்ளுங்கள்.

**ஒரு மனிதன் இறைவன் மீது வைத்துக்கொள்ள வேண்டிய பந்தம் இஸ்லாமின் போதனைகளின்படி பார்த்தால் எல்லா பொருட்களுக்கும் மேலாக மனிதன் இறைவனை நேசித்துக் கொள்ள வேண்டும் என்றாகும். பூமியிலுள்ள அனைத்து பொருட்களுக்கும் மேலாக இறைவனுக்கு கட்டுப்பட்டு கொள்ள வேண்டும். மதித்துக் கொள்ள வேண்டும். அவன் விருப்பத்திற்காக நம் விருப்பங்களை தவிர்த்துக் கொள்ள வேண்டும். அவனுக்கு கட்டுப்படாமல் இருக்காதீர்கள். மற்றொரு விஷயத்திற்காக அதாவது மற்றொரு நோக்கத்திற்காக இறை கட்டளைகளை தள்ளி வைக்காமலிருங்கள்.** இந்த குத்து.்.பாவை நன்கு உணர்ந்துக் கொள்வதற்கு அல்லாஹ் உங்களுக்கு அருள்புரிவானாக. ஆமீன்

**Issued by:**
Jamaat Ul sahih Al Islam
Dawa Department
Tamil Nadu, India
**Cell:** 7339689239
**Web:** www.jamaat-ul-sahih-al- islam.com

**Translated by:**
Azim Ahmad
**E-mail:** azimahmad070@gmail.com
**Cell:** 9789180817